10.10.2023

DVOP. 14/2021

PW-1, Sobha

**எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி,**

நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வேலை பார்த்து வருகிறேனா என்றால் இல்லை. இந்த மனு நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். திருமண செலவை 1வது எதிர்மனுதாரர் செய்தாரா என்றால் இல்லை. நாங்கள் பாதி செலவு செய்தோம். மேற்படி விஷயத்தை என் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன். மனுவை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். தங்களது மனுவில் திருமணத்தின் போது தாங்கள் சீதனமாக 20 பவுன் நகைகளும் 1வது எதிர்மனுதாரருக்கு 5 பவுன் நகைகளும் 2 லட்சம் பெருமானமுள்ள சீர்வரிசை பொருட்களும் கொடுத்ததற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தங்களது திருமணத்திற்கு முன்பு வரை 4 ம் எதிர்மனுதாரர் 6 ம் எதிர்மனுதாரருக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். நான் திருமணம் முடித்த ஒரு சில மாதங்கள் 4 ம் எதிர்மனுதாரர் தனிக்குடுத்தனம் சென்றுவிட்டார். நான் திருமணம் முடிப்பதற்கு முன்னரே 6 ம் எதிர்மனுதாரர் அவர் கணவருடன் தனியாக குடித்தனம் நடத்தி வந்தார் என்றால் இல்லை. பக்கத்து வீட்டில் இருந்தார். 4 ம் எதிர்மனுதாரரான அவரது அண்ணன் ஒரே வீட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான். என்னுடைய கணவர் பி.ஏ படித்துள்ளார். எதிர்மனுதாரர் பெங்களூரில் வேலை பார்த்தது குறித்து விசாரித்தேனா என்றால் இல்லை. என் உடன் பிறந்தவர் 3 தம்பி, ஒரு தங்கை என்றால் சரிதான். என்னுடைய சகோதரர்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் இல்லை. சகோதரிக்கு திருமணம் ஆகிவிட்டது. என்னுடைய சகோதரர்கள் என் அம்மா வீட்டில் தான் உள்ளார்கள் என்றால் சரிதான். திருமணம் முடிந்து ஒரு மாதம் காலம் தான் திருமங்கலத்தில் 1 ம் எதிர்மனுதாரருடன் இருந்தேன் என்றும் அதன் பிறகு பெங்களூர் சென்று விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. 3 மாதம் இருந்தேன். அதன் பிறகு 7 மாதம் பெங்களூரில் இருந்தேன். அப்போது கர்ப்பம் தரித்துவிட்டது காரணமாக வளைகாப்பு நிகழ்விற்காக 1வது எதிர்மனுதாரர் வீட்டில் இருந்துவிட்டு உடனடியாக மகப்பேறுக்காக என் அம்மா வீட்டிற்கு சென்றேன். என் மகப்பேறு செலவுகள் எல்லாமே என் அம்மா தான் பார்த்துக் கொண்டார் என்றால் சரிதான். குழந்தை பிறந்தவுடன் ரூ.2 லட்சம் பணம் யார் கேட்டார்கள் என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. என் அம்மாவிடம் தான் கேட்டார்கள். 1வது குழந்தை பிறந்தவுடன் என் கணவர் குழந்தையை பார்க்க வந்துவிட்டு பிறகு வேலைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு 2 வதாக 27.03.2010 ல் பிறந்த பெண் குழந்தைக்கு மகப்பேறு செலவை எதிர்மனுதாரர் தான் செய்தார் என்றால் சரிதான். 2013 வது

வருடம் இரண்டு குழந்தைகளையும் வளர்ப்பதற்கு 4 லட்சம் ரூபாய் நாங்கள் கொடுத்ததாக சொல்வது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. என் அம்மா தான் கொடுத்தார். திருமணம் முடிந்த பிறகு 1 முதல் 4 வரை உள்ள எதிர்மனுதாரர்களும் சேர்ந்து கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தேன் என்றால் சரிதான். 5 ம் எதிர்மனுதாரர் பெங்களூரில் வேலை பார்த்து வந்ததால் என்றாவது ஒரு நாள் ஊருக்கு வந்து போவார். எங்களோடு சேர்ந்து கூட்டுக் குடும்பமாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். நானும் 1ம் எதிர்மனுதாரரும் 2021 வரை சேர்ந்து வாழ்ந்தோம். எனது மனுவில் 2010 வது வருடமே எதிர்மனுதாரரை பிரிந்து வந்துவிட்டேன் என்றால் சரிதான். 3 வது எதிர்மனுதாரர் எனது மாமனார் அழைத்ததின் பேரில் 1வது எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் சரிதான். நான் எனது மனுவில் எதிர்மனுதாரர்கள் என்னை இழிவாக பேசியும் கொடுமை செய்துவந்தார்கள் என்பது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. திருமணத்தின் போது அணிவிக்கப்பட்ட நகை 20 பவுன் நகையில் 10 பவுன் நகையை வைத்துதான் குடும்பத்தை பராமரித்து வருவதாக மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் கணவருடன் சேர்ந்து வாழ்வதற்காக வேறு எதாவது நீதிமன்றத்தில் மனு செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் 1வது எதிர்மனுதாரரை பிரிந்தவுடன் எனது தாயாருடன் இருக்காமல் எனது உறவினர் (சகோதரி) காவல் துறையில் பணியாற்றும் காவலர் ரம்யா என்பவரது வீட்டில் சிறிது காலம் குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரரிடம் முறையான தகவல் தெரிவிக்காமல் வேறு நபருடன் இருந்தது குறித்து அவர் புகார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் என் அக்காவுடன் இருந்ததால் கொடுத்தார். எனது கணவர் எந்த நிறுவனத்திலும் நிலையான வேலை பார்ப்பதில்லை. ஆனால் ஒவ்வொரு நிறுவனத்திலும் ஒரு சில ஆண்டுகள் வேலை பார்த்தார் என்றால் சரிதான். இதை தவிர்த்து வேறு ஏதும் தொழில் செய்கிறாரா என்றால் எனக்கு தெரிந்து இல்லை. மனுவில் எதிர்மனுதாரர் வட்டிக்கு விட்டு ரூ. 50,000/- சம்பாதிப்பதாக சொல்லியுள்ளது கேள்விபட்டு தான் தெரியும். என் கணவர் வேலைக்கு செல்லும்போது என் சகோதரர் என்னுடன் வந்து இருந்தாரா என்றால் இல்லை. நாங்கள் 4 லட்சம் பணம் கொடுக்காததால் தான் அதை பொறுத்து பரிகாரத்தில் கேட்காததால் மேற்படி தொகை என் அம்மாவும் அவர்களதுஅப்பாவும் கேட்காததால் அதை நான் கேட்கவில்லை. சீர்வரிசை சாமான்களை நான் ஏற்கனவே எடுத்துக் கொண்டுவிட்டதால் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பாதி பொருள் அவரது வீட்டில் தான் உள்ளது. வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.